வாசிக்க: அப்போஸ்தலர் 7:54-60

***"கிறிஸ்துவின் பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்"***
***(1 பேது 4:13)***

பாடுகள் மனித வாழ்வில் வரும்போது முறுமுறுப்பும் மனக்கசப்பும் வருவது இயல்பு; வேறு சிலரது வாழ்வில் பாடுகள் மவுனத்தையும் மயான அமைதியையும் கொண்டுவருவதைக் காண்கிறோம். ஆனால், மனமகிழ்வோடும், மனத்துணிவோடும் பாடுகளை அணைத்துக்கொண்டால் அவை தொழுகையாகிவிடும் (அப் 5:41).

அநியாயத்தையும் அவமரியாதையையும் பொறுமையோடும் மகிழ்வோடும் சகிப்பது ஆராதனைக்குச் சமம். இக்கருத்தைப் பேதுரு அழகாக 1 பேதுரு 4:14-16இல் விளக்கிக்காட்டுகிறார். "நீங்கள் கிறிஸ்தவராய் இருப்பதால் துன்புற்றால், அதற்காக வெட்கப்படலாகாது. அந்தப் பெயரின் பொருட்டுக் கடவுளைப் போற்றிப் புகழுங்கள்." இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள் அவரைக் கொலை செய்துவிட்டோம் என்று கூறுவார்களாயின், கிறிஸ்து "சுகந்த வாசனையான பலியாக என்னை ஒப்புக்கொடுத்தேன்" என்பார். ஆம், கொலைசெய்தவர்களுக்கு இயேசு கிறிஸ்து தன்னை விட்டுக்கொடுத்தார்—அது தன்னார்வமான அர்ப்பணிப்பு; பாடுகளை நாடுதல் எத்தனை பரவசமான தொழுகை!

பாடுபடும்போது நாம் எதிர்க்காமல், முறுமுறுக்காமலிருந்தால் நம்மீது எறியப்படும் ஒவ்வொரு கல்லும் தேவனுக்கு ஏறெடுக்கப்படும் தூபக் கலசமாகும் (அப் 6:12,15). பக்தன் ஸ்தேவான் மரிக்கும்போது மகிமையான தொழுகையுடன், பாடுகளைச் சகித்துக்கொண்டிருந்ததைக் காணலாம். தேவ தூதன் முகம் போன்ற அவரது முகம்; வானங்கள் திறக்கப்பட்ட நிலை; தேவ மகிமையின் தரிசனம்; தேவனது வலது பக்கத்தில் சபையின் முதல் இரத்த சாட்சிக்கு இயேசு கிறிஸ்து அஞ்சலி செலுத்த எழுந்து நிற்கும் காட்சி; மன்னிப்புடன் ஒப்புக்கொடுத்த ஓர் இனிய மரணம்! இந்த மெய்சிலிர்க்கும் படப்பிடிப்பு புத்தியுள்ள ஆராதனையன்றோ?

வெண்ணுடை அணிந்த எண்ணற்ற தொழுகைக்கூட்டத்தினரைச் சந்திக்க இப்பொழுது பரமேறுவோம். அழகாய் நிற்கும் யார் இவர்கள்? "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்... ஆகையால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்தில் அவரைச் சேவிக்கிறார்கள்!" (வெளி 7:9-15).

விசுவாச வீரர்கள் பட்டியலை வாசிக்கும்போது, வீர சாகசங்களைப் புரிந்தோர் (எபி 11:33-37) ஒரு பக்கம்; அதே நேரம், மேன்மையான உயிர்த்தெழுதலை எதிர்நோக்கி, கொடூர மரணத்தை விரும்பி அணைத்துக்கொண்டவர்கள் மறுபக்கம். தங்கள் மீது விழும் கற்களைக் கடவுள்மீது தூவும் பூக்களாய்ப் பார்ப்போர் பாக்கியவான்கள்! சீன நாட்டில் சுவிசேஷத்திற்காய்ச் சிறைப்பிடிக்கப்பட்டு வதைக்கப்பட்டபோதிலும் தனது விசுவாசத்தை மறுதலிக்க மறுத்த பக்தன் வாட்ச்மேன் நீ (1903-1972) என்பவர் இந்த வரிசையைச் சேர்ந்தவர். இவர்களெல்லாரும் தங்கள்மீது எறியப்படும் கற்களை வைத்தே மணிமண்டபம் கட்டுபவர்கள்!



*விண்ணில் பிரதானியான நீர் பகைஞர்க்காகவே*
*மண்ணில் இறங்கி மரித்தீர்; நீர் வாழ்க, இயேசுவே! (பாமாலை)*
*—Edward Perronet, 1726-1792*